திரு. கரு. சீமைச்சாமி : கரும்பு உற்பத்திக்காக அதிகப் பணத்தை மானியமாகக் கொடுத்துக் கொண்டிருப்பதால் உணவு உற்பத்தி பாதிக்கப்படாதா ?

கனம் திரு. பூ. கக்கன் : உணவு உற்பத்தியைப் பாதிக்காத வகையில் தான் செய்கிறோம். சர்க்கரையும் ஒருவகையில் உணவு தான். இது வெளி நாட்டுச் செலாவணியையும் தேடித் தருகிறது.

Workmen's Compensation Act 1923

* 61 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of applications received for the grant of compensation during the year 1963–64 under the Workmen's Compensation Act, 1923; and

(*b*) the number pending?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) At the beginning of the year 1963, 97 cases were pending and 149 applications were received during the year. Of these, 87 cases were pending at the end of the year. During the year 1964, 158 applications were received. Of the total pendency of 245 cases, 166 were pending at the end of the year.

(அ) & (இ) 1963 தொடக்கத்தில் 97 மனுக்கள் முடிவு செய்யப் படாமல் இருந்தன. அந்த ஆண்டில் மேலும் 149 மனுக்கள் வந்தன. இவற்றில் ஆண்டு இறுதியில் 87 மனுக்கள் முடிவு செய்யப் படாமல் இருந்தன. 1964-ம் ஆண்டில் 158 மனுக்கள் பெறப் பட்டன. எனவே முடிவு செய்யப்படாமல் நின்ற மொத்தம் 245 மனுக்களில், ஆண்டு இறுதியில் 166 மட்டுமே முடிவுறு நிலையில் இருந்தன.

பீடித் தொழிலாளர்கள்

* 62 கேள்வி—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களை ஸ்டேட் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் சேர்க்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) தற்போது அத்தகைய உத்தேசம் எதுவுமில்லை.

(இ) தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் சட்டத்தின் கீழ் வரும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கும் தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் திட்டத்தை நீடித்த பிறகுதான், பீடித் தொழிலாளர்களை இத் திட்டத்தில் சேர்ப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்க முடியும்.

திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் சபாநாயகர் அவர்களே, பீடித் தொழிலாளர்களிடமிருந்து ஏதாவது அப்பேர்ப்பட்ட மனுக்கள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.